A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 56 / 2023**

திரு R. சிவானந்தம்,
கலைஞர் மார்டன் அரிசி ஆலை,
68/B, சிவானந்தம் அரிசி ஆலை ரோடு,
பையூர், ஆரணி – 632 301.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு S. பாபு)

எதிர்

1) செயற்பொறியாளர்/ ஆரணி,
திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV, துணை மின் வளாகம், கார்த்திகேயன் ரோடு,
சைதாபேட்டை, ஆரணி – 632 316.

2) உதவி மின்பொறியாளர்/ நகர்/மேற்கு/ஆரணி,
திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV, துணை மின் வளாகம், கார்த்திகேயன் ரோடு,
சைதாபேட்டை, ஆரணி – 632 316.

3) உதவி கணக்கு அலுவலர்,
திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வேலூர் ரோடு, வேங்கிக்கால்,
திருவண்ணாமலை – 606 604.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு R. ரவி, செயற்பொறியாளர்/ ஆரணி
திரு N.K. பரந்தாமன், உதவி மின்பொறியாளர்/ நகர்/மேற்கு/ஆரணி
திரு R. கலைசெல்வன், உதவி கணக்கு அலுவலர்)

**மனு பெறப்பட்ட நாள்: 07-08-2023**

**கேட்புரை நாள்: 21-09-2023**

**ஆணை நாள்: 03-10-2023**

07.08.2023 அன்று பெறப்பட்ட திரு R. சிவானந்தம், கலைஞர் மார்டன் அரிசி ஆலை, 68/B, சிவானந்தம் அரிசி ஆலை ரோடு, பையூர், ஆரணி – 632 301 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 56/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.09.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது மின் இணைப்பு எண். 221–012–319–இல் தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட குறைவுத் தொகையை இரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது மின் இணைப்பு எண் 221–012–319–இல் தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட குறைவுத் தொகையை இரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பிற்கான மின் அளவி 08/2016 மற்றும் 10/2020–இல் பழுதடைந்ததாகவும் புதிய மின் அளவி மாற்றப்பட்டு பழுதடைந்த மின் அளவி, மின் அளவி சோதனை கூடத்திற்கு அனுப்பப்பட்டு சோதனை செய்ததில் மின் அளவி எறிந்துவிட்டதாகவும் எனவே அதில் உள்ள தகவல்களை தறவிறக்கம் செய்ய இயலாது என சோதனை அறிக்கை பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட Audit slip No.15/ dt. 27.11.2018 மற்றும் Audit slip No.177/ dt. 14.02.2022 ஆகிய இரண்டு தொகைகளையும் இரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர் திருவண்ணாமலை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 11.04.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருவண்ணாமலை மின்பகிர்மான வட்டம் Audit slip No.15/ dt. 27.11.2018–ஐ இரத்தும் செய்தும் Audit slip No.177, dt. 14.02.2022–ஐ திருத்தம் செய்தும் சராசரி மின் கட்டண குறைவுத் தொகை ரூ.1,34,830/–ஐ செலுத்துமாறு 03.07.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது.

2.5 மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 திருவண்ணாமலை மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 03.07.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர் மனுவில் உள்ள வாதங்கள் மற்றும் எதிர் மனுதாரரின் பதில் உரையில் உள்ள வாதங்களை கேட்டு மன்றத்தில் விசாரணை செய்து கீழ்க்கண்ட தீர்வுகள் தெரிய வருகிறது.*

*1) <u>A.S.No.15/27.11.2018</u>*

*தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட தணிக்கை சீட்டு (1)–க்கு A.S.No.15/27.11.2018, 08/2016–ல் மின் அளவி பழுது ஏற்பட்டது எனவும் அதிக உபயோக காலமான 01/2016 முதல் 04/2016 –க்கான Average Billing கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கணக்கீடு விதி Supply code 11(5)–ன் படி கணக்கிடப்பட்டுள்ளது Supply code 11(5) "If the conditions in regard to use of electricity during the periods as mentioned above were different, assessment shall be made on the basis of any consecutive four months period during the preceding twelve months when the conditions of working were similar to those in the period covered by the billing".*

*மேற்கண்ட மின் இணைப்பு எண் 221–012–319, CL 112KW, வீதபட்டி–III B–யின் நுகர்வோர் பேரேட்டை ஆய்வு செய்ததில் 28.07.2016 வரை மின்அளவி நன்றாக உள்ளது என்றும் 05/2016, 06/2016, 07/2016 மற்றும் 09/2016 வரை மின் அளவி பழுது என எந்த சோதனை மூலமும் நிரூபணம் செய்யவில்லை என்பது தெரிய வருகின்றது. 14.09.2016 தேதியிட்ட MRT சோதனையில் மின் அளவி Display Error என்று அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. மின் அளவி கழட்டும் போது இறுதி மின் அளவு எடுக்க இயலவில்லை என்பது நுகர்வோர் பேரேடு வாயிலாக தெரிய வருகிறது. 29.07.2016 அன்று முதல் 13.09.2016 வரை உள்ள காலத்தையே மின் அளவி பழுது காலமாக கருதவேண்டும். எனவே தணிக்கை பிரிவினரால் விதிக்கப்பட்ட Audit Slip*

*No.15/dt.27.11.2018 –ஐ முழுவதுமாக இரத்து செய்திட இம்மாமன்றத்தில் தீர்வு ஏற்படுத்தப்படுகிறது.*

***2) A.S.No.177/14.02.2022***

*தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட தணிக்கை சீட்டு (2)–க்கு A.S.No.177/14.02.2022 10/2020–ல் மின் அளவி எரிந்துள்ளது எனவும், சராசரி குறைவுத் தொகையாக 09/2020 முதல் 01/2021 வரை சராசரி கட்டண குறைவுத் தொகையாக ரூ.95,646/– Supply code 11(2)–ன் படி "The quantity of electricity, supplied during the period in question shall be determined by taking the average of the electricity supplied during the preceding four months in respect of both High Tension service connections and Low Tension service connections provided that the conditions in regard to use of electricity during the said four months were not different from those which prevailed during the period in question" –ன் படி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட குறைவுத் தொகையினை மாற்றம் செய்து மேற்கூறிய விதிமுறையின் படி, உண்மையான குறைவுத் தொகை கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்து தீர்வு ஏற்படுத்தப்படுகின்றது.*

*மேற்கண்ட மின் இணைப்பு எண் 221–012–319, CL 112KW, வீதபட்டி–III B–யின் மின் இணைப்பிற்கு தணிக்கை அலுவலர் விழுப்புரம் அவர்களால் மின் அளவி எரிந்ததற்காக 09/2020 மாதம் முதல் 01/2021 மாதம் வரை சராசரி குறைவுக்கட்டணமாக ரூ.95,646/– வசூலிக்கும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (தணிக்கை சீட்டு எண். 177/14.07.2022)*

*இம்மின் இணைப்பில் 29.09.2020 வரை மீட்டர் நல்ல நிலையிலேயே இயங்கி வந்துள்ளது என தெரியவருகிறது. இம்மின் இணைப்பில் பொருத்தியுள்ள மீட்டர் Static with MD recorded meter ஆகும். 29.09.2020 தேதிக்கு பிறகே மீட்டர் பழுதாகியுள்ளது. 29.01.2021 தேதியிட்ட MRT சோதனையில் மின் அளவி எரிந்துள்ளது என்று அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. மின் அளவி கழட்டும் போது இறுதி மின் அளவு எடுக்க இயலவில்லை என்பது நுகர்வோர் பேரேடு வாயிலாக தெரிய வருகிறது.*

*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின்வழங்கல் விதி 11(2)–ன் படி முந்தைய நான்கு மாதங்களின் மின்சார பயன்பாடு அடிப்படையில் சராசரி மின் அளவு கணக்கிடப்பட்டுள்ளது.*

*05/2020–19724*
*06/2020–14548*
*07/2020–15028*
*08/2020–14124*
*மொத்தம் – 63424 யூனிட்கள் 15856 சராசரி யூனிட்கள்*
*15856 x 6.35 =100686*
*மின்வரி = 5034*
*நிலை கட்டணம் = 3920*

மொத்தம் ரூ=109640/-

| கணக்கீட்டு மாதம் | KWH ரீடிங் | சராசரி யூனிட்கள் | CC கட்டணம் | மின் வரி | நிலை கட்டணம் | வசூல் செய்யப்பட வேண்டிய மொத்த தொகை ரூபாய் | ஏற்கனவே வசூல் செய்யப்பட்ட தொகை ரூபாய் | குறைவுக் கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 28.10.2020 | 5977.2 | 15856 | 100686 | 5034 | 3920 | 109640 | 62592 | 47048 |
| 30.11.2020 | 5977.2 | 15856 | 100686 | 5034 | 3920 | 109640 | 94132 | 15508 |
| 30.12.2020 | 5977.2 | 15856 | 100686 | 5034 | 3920 | 109640 | 49107 | 60233 |
| 08.01.2021 | 5977.2 | F.R | | | | | | |
| 08.01.2021 | 1.48 | I.R | | | | | | |
| 29.01.2021 | 241.63 | 13834 | 87846 | 4392 | 3920 | 96158 | 90139 | 6019 |
| | | **மொத்தம்** | **389904** | **19494** | **15680** | **432374** | **295967** | **134830** |

பழுதடைந்த காலத்திற்கு 30.12.2020 முதல் 07.01.2021 வரை 8 நாட்கள் 15856/30 x 8=4228 யூனிட்கள் புதிய மின் அளவி மாற்றப்பட்ட பிறகு 01/2021 மாதத்திற்கான மின் கணக்கீடு

08.01.2021 1.48 I.R

29.01.2001 241.63 F.R 240.15×40-9606 யூனிட்கள்

மொத்தம் =13834 யூனிட்கள்

மேற்குறிப்பிட்ட கணக்கீடுகளின் படி மின் அளவி எரிந்த காலத்திற்கு வசூலிக்கப்பட வேண்டிய சராசரி மின் கட்டணம் குறைவு தொகை ரூ.1,34,830/- ஆகும்.

ஆனால் தணிக்கை அலுவலரின் தணிக்கை சீட்டில் Less Miscellaneous Slip Rs.83668/- என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மின் இணைப்பில் ரூ.83668/-க்கு Miscelieneous Slip ஏதும் பதிவேற்றம் செய்து வசூலிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. எனவே தணிக்கை பிரிவினரால் விதிக்கப்பட்ட Audit Slip -ல் மாற்றம் ஏற்படுத்தி கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

மேற்கண்ட மின் இணைப்பு எண்.221-022-319 CL 112KW, வீதபட்டி III B-யின் இணைப்பிற்கு தணிக்கை அலுவவர் விழுப்புரம் அவர்களால் மின் அளவி எரிந்ததற்காக Audit Slip No.15/ dt.27.11.2018-ஐ இரத்து செய்தும், Audit Slip No.177/dt.14.02.2022 -ஐ திருத்தம் செய்து சராசரி மின் கட்டணம் குறைவு தொகை ரூ.1,34,830/- ஐ செலுத்துமாறும் உத்தரவிட்டு மனு எண்.1104230955898 நாள்: 11.04.2023 ஆனது இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.09.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு S. பாபு அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு R. ரவி, செயற்பொறியாளர்/ ஆரணி, திரு N.K. பரந்தாமன், உதவி மின்பொறியாளர்/ நகர்/மேற்கு/ஆரணி மற்றும் திரு R. கலைசெல்வன், உதவி கணக்கு அலுவலர், திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண். 221-012-319, CL 112KW, வீதபட்டி-IIIB-ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மின்அளவி 10/2020 ஆம் மாதம் எரிந்துவிட்டதற்காக சராசரி உபயோகம் கணக்கிட்டு சராசரி தொகையை செலுத்தியுள்ளதாகவும், 10/2020 – ஆம் மாதம் எரிந்துவிட்டதற்காக சராசரி உபயோகம் கணக்கிட்டு (09/2020 முதல் 01/2021) சராசரி குறைவு கட்டணம் ரூ.95,646/- செலுத்த வேண்டும் என உதவி தணிக்கை அலுவலர்/விழுப்புரம் அவர்களால் வழங்கப்பட்ட தணிக்கை சீட்டை (தணிக்கை சீட்டு எண்.177/14.02.2022) -ஐ ரத்து செய்ய வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரரின் அரிசி ஆலை மின் இணைப்பு எண்: 221-012-319, CL. 112KW, வீதபட்டி-IIIB மின் இணைப்பிற்கான மின் அளவி 08-2016-ஆம் மாதம் பழுதடைந்ததற்காக தணிக்கை குழு, விழுப்புரம் அவர்களால் போடப்பட்டுள்ள சராசரி

குறைவுத்தொகை ரூ.61,865/-மற்றும் 10/2020 ஆம் மாதம் எரிந்துவிட்டதற்காக தணிக்கை குழு விழுப்புரம் அவர்களால் போடப்பட்டுள்ள சராசரி குறைவுத்தொகை ரூ.95,646/- இவ்விரண்டு தொகையையும் இரத்து செய்ய வேண்டும் என கோரி மேல்முறையீட்டாளர், தலைவர்/மி.நு.கு.தீ.ம/திருவண்ணாமலை அவர்களுக்கு மனு அளிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 தலைவர்/மி.நு.கு.தீ.ம/திருவண்ணாமலை அவர்களால் மேற்காணும் குறைவுத்தொகை ரூ.61,865/- தள்ளுபடி செய்தும் மற்றும் குறைவுத்தொகை ரூ.95,646/- திருத்தப்பட்டு ரூ.1,34,830/- மின் நுகர்வோர் செலுத்தப்பட வேண்டும் என உத்திரவு வழங்கப்பட்டதாகவும், இவ்வுத்திரவுகளை மின் வாரியம் சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் திரு R.சிவானந்தம் அவர்கள் ரூ.1,34,830/- செலுத்தப்படவேண்டும் என்ற உத்திரவினை தள்ளுபடி செய்ய மேல்முறையீடு செய்திருப்பதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரரின் அரிசி ஆலை மின் இணைப்பு எண். 221-012-319, CL 112KW, வீதபட்டி-IIIB மின் இணைப்பிற்கான மின் அளவி 10/2020 -ம் மாதம் எரிந்ததற்காக சராசரி குறைவுத் தொகை உதவி தணிக்கை அலுவலர்/வருவாய் பிரிவு/ ஆரணி அவர்கள் மூலம் கணக்கிடப்பட்டு ரூ.87,851/- செலுத்துமாறு நுகர்வோருக்கு 28.07.2021 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாகவும், பிறகு தணிக்கை அலுவலர் விழுப்புரம் அவர்கள் மேற்கண்ட 10/2020 -ம் மாதம் மின் அளவி எரிந்ததற்காக சராசரி குறைவுத் தொகை ரூ.95,646/- (Audit Slip No.177/dt.14.02.2022) வசூல் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும், எரிந்த மின் அளவி சோதனை கூடத்திற்கு (MRT/Thiruvannamalai) அனுப்பப்பட்டு சோதனை செய்ததில் மின் அளவி எரிந்துள்ளது என சோதனை அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும், எரிந்த மின் அளவியில் இருந்து டேட்டாக்களை CMRI மூலம் தறவிறக்கம் செய்யமுடியவில்லை என்பதால் Average Billing 'சப்ளை கோட் பிரிவு 11(2) ன் படி கணக்கீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் நிலை மின் அளவி என்பதால் 09/2020-க்கு முன் வரையில் மின் அளவியில் எந்த பழுதும் ஏற்படவில்லை என்றும் மின் கட்டண அட்டை மற்றும் நுகர்வோர் பேரேட்டை

பரிசீலனை செய்ததில் 09/2020 வரை மின் பயனீட்டு அளவு உதவி மின் பொறியாளர்/இ.ப/நகரம்/மேற்கு/ஆரணி அவர்களால் குறிக்கப்பட்டு உள்ளதாகவும், மின் அளவி பழுதான காலத்திற்கு (10/2020, 11/2020 மற்றும் 12/2020) கணினியில் Auto Generation மூலம் சராசரி கணக்கிடப்பட்டுள்ளது என்றும் மின் அளவி கையிருப்பு இல்லாத காரணத்தால் மின் அளவியை மாற்ற கால தாமதம் ஏற்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 தணிக்கை அலுவலரின் தணிக்கை சீட்டில் எவ்வித ஆதாரமும் இல்லாமல் Less Miscellaneous Slip Rs.83,668/- என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இந்த மின் இணைப்பில் ரூ.83668/- க்கு Miscellaneous Slip ஏதும் பதிவேற்றம் செய்து வசூலிக்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டு மனுவில் "As per Annexure III (VII&VIII) in Form for filing complaint before Electricity Ombudsman, the consumer stated that due to corona affected labours, the Mill did not run as much as the shortfall arrived. Please cancel the audit slip AS. No. 177/14.02.2022" என தெரிவித்துள்ளதாகவும், சராசரி குறைவுத்தொகை 05/2020 முதல் 08/2020 மாதத்தின் மின் பயனீட்டின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளதாகவும், இந்த மாதங்களும் கொரானா நோய்தொற்று உள்ள மாதங்களே ஆகும் எனவும் மின் அளவி பழுதான காலமும் சராசரி கணக்கீட்டிற்காக எடுத்துக்கொண்ட மாதமும் ஒத்திருக்கிறதாகவும், எனவே மின் நுகர்வோரின் இந்த கோரிக்கை ஏற்றுகொள்ள இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளரின் அரிசி ஆலை மின் இணைப்பு எண். 221-012-319, CL 112KW, வீதபட்டி-IIIB மின் இணைப்பிற்கான மின் அளவி 08/2016 மற்றும் 10/2020 ஆகிய மாதங்களில் மின் அளவி பழுதடைந்ததாகவும் அதற்கான சராசரி உபயோகம் தணிக்கை துறையினரால் கணக்கிடப்பட்டு குறைவுத் தொகை Audit slip No.15/ dt.

27.11.2018 மற்றும் Audit slip No.177/ dt. 14.02.2022 மூலம் செலுத்த அறிவுறுத்தப்பட்டதாகவும் அதனை எதிர்த்து மேல்முறையீட்டாளர் திருவண்ணாமலை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

7.3 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருவண்ணாமலை மின்பகிர்மான வட்டம் மேல்முறையீட்டாளரின் மனுவை பரிசீலனை செய்து Audit slip No.15/ dt. 27.11.2018-ஐ இரத்து செய்தும் மற்றும் Audit slip No.177/ dt. 14.02.2022-ஐ திருத்தம் செய்தும் குறைவுத்தொகை ரூ.95,646/- திருத்தப்பட்டு ரூ.1,34,830/- மின் நுகர்வோர் செலுத்தப்பட வேண்டும் என உத்திரவு வழங்கப்பட்டதாகவும், ரூ.1,34,830/- செலுத்தப்படவேண்டும் என்ற உத்திரவினை தள்ளுபடி செய்யுமாறு மேல்முறையீட்டாளர் முறையீடு செய்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ள தணிக்கை சீட்டு எண். 177 நாள் 14.02.2022-இல் மின் அளவி பழுதடைந்த காலம் 09/2020 முதல் 01/2021 வரை என எடுக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், நுகர்வோர் பேரேட்டில் உள்ள பதிவின்படி 29.09.2020 அன்று மின்கணக்கீடு செய்யும்பொழுது மின்னளவி சரியான நிலையில் இருந்தது என்பதற்கு ஆதாரமாக மின் கணக்கீடு Status "Normal" என்று உதவி பொறியாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு 28.10.2020 அன்று மின் கணக்கீடு செய்யும்பொழுதுதான் மின்னளவி பழுது என Assessment Status-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, 29.09.2020 வரை மின் அளவி நல்ல நிலையிலேயே இயங்கி வந்துள்ளது தெரிய வருகிறது. மேலும் 08.01.2021 அன்று பழுதடைந்த மின் அளவி மாற்றப்பட்டுள்ளது. எனவே மின் அளவி பழுதடைந்த காலம் 30.09.2020 முதல் 08.01.2021 என தெரிய வருகிறது. இதனை கருத்தில் கொண்டே மன்றமும் தணிக்கை துறையினர் அளித்த குறைவுத் தொகையை திருத்தம் செய்து திருத்தம் செய்யப்பட்ட குறைவுத் தொகையை செலுத்த மேல்முறையீட்டாளருக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7.5 29.01.2021 தேதியிட்ட MRT சோதனை அறிக்கையில் மின் அளவி எரிந்துள்ளது என்று அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. மின் அளவி கழற்றும் போது இறுதி மின் அளவு எடுக்க இயலவில்லை என்பது நுகர்வோர் பேரேடு வாயிலாக தெரிய வருகிறது. இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

மின்வழங்கல் விதி (11)–ஐ ஆராய விரும்புகிறேன்.

> *"11. மின்னளவி இல்லாத, மின்னளவி பழுதுற்ற நிலைகளில் பட்டியலிடுவதற்கு மதிப்பீடு செய்தல்:*
>
> *(1) xxxxx*
>
> *(2) குறிப்பிட்ட உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்னிணைப்பு வகையினங்களுக்கு நிகழ்வில் கருதப்படும் கால இடைவெளியில் வழங்கப்பட்ட மின்சார அளவும், கருதப்படும் கால இடைவெளியில் உள்ள மின்சாரப் பயன்பாட்டுத் தன்மையும், முந்தைய நான்கு மாதங்களின் மின்சாரப் பயன்பாட்டுத் தன்மையிலிருந்து மாறுபடாமலிருக்கும் நிலையில் முந்தைய நான்கு மாதங்களில் நுகரப்பட்ட மின்சார அளவின் மாதச் சராசரி வீதத்தில் கணக்கிட வேண்டும்.*
>
> *(3) xxxxx*
>
> *(4) xxxxx*
>
> *(5) கருதப்பட்ட கால இடைவெளிகளில் மின்சாரப் பயன்பாட்டுத் தன்மை வேறுபட்டால், முந்தைய 12 மாத இடைவெளியில் உள்ள ஒத்த பணி நிலைமை அல்லது தன்மை தொடர்ந்து நிலவும் நான்கு மாதங்களில் வழங்கப்பட்ட மின்சார அளவின் சராசரி அடிப்படையில் பட்டியலிடும் காலத்துக்கு மதிப்பீடு செய்ய வேண்டும்.*
>
> *xxxx"*

7.6 இவ்வழக்கில் எதிர்மனுதாரர் மேற்கூறிய விதி 11(2)–இன்படி மின் பயனீட்டு குறைவுத்தொகை கணக்கிட்டு ரூ.1,34,830/– செலுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார். அதன் கணக்கீடு பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

05/2020–19724
06/2020–14548
07/2020–15028
08/2020–14124
மொத்தம் – 63424 யூனிட்கள் அதாவது 15856 சராசரி யூனிட்கள்

(Amount in Rs.)

| கணக்கீட்டு மாதம் | KWH ரீடிங் | சராசரி யூனிட்கள் | CC கட்டணம் | மின் வரி | நிலை கட்டணம் | வசூல் செய்யப்பட வேண்டிய மொத்த தொகை ரூபாய் | ஏற்கனவே வசூல் செய்யப்பட்ட தொகை ரூபாய் | குறைவுக் கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 28.10.2020 | 5977.2 | 15856 | 100686 | 5034 | 3920 | 109640 | 62592 | 47048 |
| 30.11.2020 | 5977.2 | 15856 | 100686 | 5034 | 3920 | 109640 | 94132 | 15508 |
| 30.12.2020 | 5977.2 | 15856 | 100686 | 5034 | 3920 | 109640 | 49107 | 60233 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 08.01.2021 | 5977.2 | F.R | | | | | | |
| 08.01.2021 | 1.48 | I.R | | | | | | |
| 29.01.2021 | 241.63 | 13834 | 87846 | 4392 | 3920 | 96158 | 90139 | 6019 |
| | | **மொத்தம்** | **389904** | **19494** | **15680** | **432374** | **295967** | **134830** |

பழுதடைந்த காலத்திற்கு 30.12.2020 முதல் 07.01.2021 வரை 8 நாட்கள் 15856/30 x 8=4228 யூனிட்கள் புதிய மின் அளவி மாற்றப்பட்ட பிறகு 01/2021 மாதத்திற்கான மின் கணக்கீடு

08.01.2021 1.48 I.R

29.01.2001 241.63 F.R 240.15×40–9606 யூனிட்கள்

மொத்தம் =13834 யூனிட்கள்

மேற்குறிப்பிட்ட கணக்கீடுகளின் படி மின் அளவி எரிந்த காலத்திற்கு வசூலிக்கப்பட வேண்டிய சராசரி மின் கட்டணம் குறைவு தொகை ரூ.1,28,811/– மற்றும் 01/2021 மாதத்தின் மின் கட்டண குறைவுத்தொகை ரூ.6019/– ஆக மொத்தம் ரூ.1,34,830/– என தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.7 மேற்கண்ட விதி 11(2)யின்படி ஒரு மின் இணைப்பில் மின் அளவி பழுதான நிலையில் அக்காலத்திற்குண்டான நுகர்வை தீர்மானிக்க மின் அளவி பழுதான காலத்திற்கு முந்தைய நான்கு மாதங்களில் வழங்கப்பட்ட மின்சாரத்தின் சராசரியை எடுத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.8 நுகர்வோர் பேரேட்டின் மூலம் நாம் அறிவது 29.09.2020 வரை மின் அளவி நல்ல நிலையில் இயங்கியுள்ளது. 29.09.2020–க்கு பிறகு தான் மின் அளவி பழுதாகி உள்ளது. எனவே மின் அளவி பழுதான காலம் 29.09.2020–க்கு பிறகு, அதாவது 10/2020, 11/2020, 12/2020 மற்றும் மின் அளவி மாற்றப்பட்ட 08.01.2021 வரை என எடுத்துக் கொள்ளப்பட்டது சரியே என கருதுகிறேன். இருப்பினும் மின் அளவி பழுதான காலத்திற்கு உண்டான சராசரி குறைவுத் தொகைக்கான கணக்கீட்டு முறையை ஆராய விரும்புகிறேன்.

7.9 எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின்படி மின் அளவி பழுதான மாதங்களுக்கு (10/2020, 11/2020, 12/2020) சராசரி குறைவுத்தொகை 05/2020 முதல் 08/2020 மாதத்தின் மின் பயனீட்டின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் 11(2) படி முந்தைய நான்கு மாதங்களை எடுக்கும்பட்சத்தில் 06/2020 முதல் 09/2020

மாதத்தின் மின் பயனீட்டின் அடிப்படையிலேயே சராசரி கணக்கீடு எடுத்திருக்க வேண்டும். எந்த காரணத்தின் அடிப்படையில் 05/2020 முதல் 08/2020 மாதங்களின் சராசரி எடுக்கப்பட்டது என எதிர்மனுதாரர் தெரிவிக்கவில்லை.

7.10 மேலும் மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பிற்கான சராசரி கணக்கீடு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின்வழங்கல் 11(5)இன்படி ஒத்த காலத்தை கருத்தில் கொண்டு வழங்கவில்லை என வாதிட்டார். இருப்பினும் நுகர்வோர் பேரேட்டினை ஆராயும்போது மேல்முறையீட்டாளரின் மின் அளவி பழுதான காலத்திற்கு முந்தைய 12 மாத இடைவெளியில் உள்ள காலக்கட்டமான 10/2019, 11/2019 மற்றும் 12/2019 ஆகிய காலங்களில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தது தெரிய வருகிறது. எனவே, விதி 11(5) இங்கு பொருந்தாது.

7.11 எனவே விதி 11(2)இன்படி மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின் அளவி பழுதான காலத்திற்கு முந்தைய நான்கு மாதங்களான 06/2020, 07/2020, 08/2020 மற்றும் 09/2020 ஆகிய மாதங்களில் பதிவான மின்பயன்பாடு அளவுகளின் சராசரியைக் கொண்டு 10/2020, 11/2020, 12/2020 மற்றும் 08.01.2021 வரையிலான மின் அளவி பழுதான காலங்களுக்கு மின் பயன்பாட்டு குறைவுத் தொகை கணக்கீடு செய்யுமாறு தீர்வு செய்கிறேன். மேலும், மேல்முறையீட்டாளருக்கு தமிழ்நாடு மின்சாரப் வழங்கல் விதி 13(2)இன்படி உரிய அறிவிப்பு கொடுத்து மின் அளவி பழுது ஏற்பட்ட காலத்திற்கான நுகர்வு கட்டணத்தை வசூலிக்க உத்திரவிடப்படுகிறது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான தணிக்கை துறையினரின் Audit slip No.177/ dt. 14.02.2022–ஐ இரத்து செய்யும் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி மின் இணைப்பில் மின் அளவி பழுதான காலத்திற்கு முந்தைய நான்கு மாதங்களான 06/2020, 07/2020, 08/2020 மற்றும் 09/2020 ஆகிய மாதங்களில் பதிவான மின்பயன்பாடு அளவுகளின் சராசரியைக் கொண்டு 10/2020, 11/2020, 12/2020 மற்றும் 08.01.2021 வரையிலான மின் அளவி பழுதான காலங்களுக்கு மின் பயன்பாட்டு குறைவுத் தொகை கணக்கீடு செய்து

திருத்தப்பட்ட கேட்பு அறிவிக்கை மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றிய பின்பு அது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 56/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1) திரு R. சிவானந்தம், – By RPAD
கலைஞர் மார்டன் அரிசி ஆலை,
68/B, சிவானந்தம் அரிசி ஆலை ரோடு,
பையூர், ஆரணி – 632 301.

2) செயற்பொறியாளர்/ ஆரணி,
திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV, துணை மின் வளாகம், கார்த்திகேயன் ரோடு,
சைதாபேட்டை, ஆரணி – 632 316.

3) உதவி மின்பொறியாளர்/ நகர்/மேற்கு/ஆரணி,
திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV, துணை மின் வளாகம், கார்த்திகேயன் ரோடு,
சைதாபேட்டை, ஆரணி – 632 316.

4) உதவி கணக்கு அலுவலர்,
திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வேலூர் ரோடு, வேங்கிக்கால்,
திருவண்ணாமலை – 606 604.

5) மேற்பார்வை பொறியாளர், – By email
**திருவண்ணாமலை** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வேங்கிக்கால், திருவண்ணாமலை – 606 604.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8) உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.